பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 24 வெள்ளிக்கிழமை 05.02.2021 கதிர் 323

## பருத்தித்துறை நீதிமன்றம் பேரணிக்கு தடை உத்தரவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இன்று முதல் நான்கு நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தப் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர். 3

## தடை உத்தரவை நீக்கியது யாழ்ப்பாணம் நீதிமன்றம்!

மணிவண்ணனின் ஆட்சேபனையையடுத்து



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் நாளை வரை ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை 2

## நீதிக்கான அஹிம்சைப் போராட்டப் பேரணிக்கு மல்லாகம், சாவகச்சேரி நீதிமன்றங்கள் அனுமதி

### ஸ்ரீகாந்தா, சயந்தன், திருக்குமரனின் வாதங்களுக்குக் கிடைத்தது வெற்றி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

அரசின் அராஜகங்களுக்கு எதிராகவும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அஹிம்சைவழிப் போராட்டப் பேரணி நடைபெற்று வரும் நிலையில் சாவகச்சேரி மற்றும் மல்லாகம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் தடை உத்தரவு விண்ணப்பங்களை இன்று தள்ளுபடி செய்துள்ளன.

இதன்படி, சாவகச்சேரி 2

## முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலில் வணக்கம்

# மாபெரும் எழுச்சிப் பேரணி வவுனியாவுக்குப் பயணம்!



### பல்வேறு நெருக்கடிகளைக் கடந்து பல்லாயிரக்கணக்கானோர் ஆதரவு

**தமிழ்பேசும் மக்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் எழுச்சிப் பேரணி இன்று பிற்பகல் 3.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலை வணங்கிய பின்னர் தற்போது வவுனியா நோக்கிப் பயணிக்கின்றது.** 3

## பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல இது!

### எமக்கும் இந்த நாடு சொந்தம்; சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



சிறுபான்மை மக்கள், தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பேரணியேயன்றி, இது பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். 2

## போராட்டக்களத்தில் நாமும் நிச்சயம் கரம் கோர்ப்போம்!

### மனோ எம்.பி. அறிவிப்பு



தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும் ராஜபக்ஷ அரசு, தமிழ்மொழியைப் பேசுகின்ற, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களைக் கடைப்பிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயகப் 2

## 7ஆம் திகதி வரை போராட்டம் நீடிப்பு

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி மேலும் ஒரு நாள் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி பொத்துவிலில் ஆரம்பமான பேரணி நாளை 6ஆம் திகதி பொலிகண்டியைச் சென்றடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரை: நீதிக்கான போராட்டம் வெற்றிபெறட்டும்

### நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வாழ்த்து




திட்டமிட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வேண்டி நடைபெறுகின்ற ஈழச் சொந்தங்களின் தொடர் போராட்டமும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியும் வெற்றிபெறட்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2

## பேரணியின் வாகனங்களுக்கு சேதம் விளைவித்த விஷமிகள்

சில விஷமிகளால் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டதால், பேரணியில் பங்கேற்ற வாகனங்களின் டயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. 2



## எந்தத் தாக்குதல் நடத்தினாலும் நாம் அஞ்சுபவர்கள் அல்லர்!

### சிவாஜிலிங்கம் வீர முழக்கம்



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியை குழப்புவதற்கு யார் எத்தகைய தாக்குதலை நடத்தினாலும், நாம் அதற்கு அஞ்சுபவர்கள் அல்லர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணி இன்று மூன்றாவது நாளாக நடைபெற்றது. 2


வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பெரும்பான்மை மக்களுக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையைக் கண்டித்தும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்தப் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த பேரணி பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் சிங்கள, பௌத்த மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கும் உண்டு. ஏனெனில் நாங்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்றாலும் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் பேசும்போது தான் சிங்கள பௌத்தன் என்று தெரிவித்தார்.

அவர், அவ்வாறு கூறியது எங்களுக்குப் பிரச்சினை இல்லை. எனினும், இந்த நாட்டின் ஜனாதிபதி, பெரும்பான்மை மக்களுக்கும் மாத்திரம் சேவையாற்றுவேன் என்று தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எங்களுக்கும் இந்த நாடு சொந்தமானது. நாங்களும் வசிக்கின்றோம். அதே போன்று பெரும்பான்மை மக்களும் இந்த நாட்டில் வசிப்பதற்கான உரிமை உள்ளது. எங்களின் உரிமைகளை அகற்றமுடியாது.

இதனடிப்படையில், நாங்கள் இந்தப் பேரணியை மேற்கொள்கின்றோம் - என்றார்.

## பேரணியின் வாகனங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்பேசும் மக்களுக்கு நீதி கோரி மூன்றாவது நாளாக இன்று பேரணி தொடர்கின்றது. இந்தநிலையில், பேரணியில் பங்கேற்ற வாகனங்களைச் சேதப்படுத்தும் நோக்குடன் புல்மோட்டை பாலத்துக்கு அருகில் சில வாகனங்கள் மீது விஷமிகளால் இன்று பகல் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பாதையில் ஆணிகளை வைத்தும் அவர்கள் மோசமான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது பேரணியில் கலந்துகொண்டிருந்த மூன்று வாகனங்கள் சேதமடைந்துள்ளன. இதன்காரணமாக பேரணி முல்லைத்தீவு நகரை வந்தடைய சற்று தாமதமடைந்தது.

இதேவேளை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி மீது திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள இளைஞர்களால் பரவலான தாக்குதல் நடத்தப்பட்டது எனப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் திட்டமிட்டவாறு பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## எந்தத் தாக்குதல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் திருகோணமலை - மடத்தடிச் சந்தியில் வைத்து, எம்.கே. சிவாஜிலிங்கம் பயணித்த வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக எம்.கே. சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

திருகோணமலை - மடத்தடிச் சந்தியில் வைத்து நானும், திருமதி அனந்தி சசிதரனும் பயணித்த வாகனத்தை பெரும்பான்மையினர் தாக்கினர்.

இவ்வாறு தாக்குதலை நடத்தியவர்களின் கைகளில் பெற்றோல் போத்தல்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மேலும் பொலிஸாரும் பாதுகாப்பு பணிகளில் இருந்த வேளையில்தான், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் விழ விழ எழுவோம், வீறுகொண்டு எழுவோம் என்றதன் அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் பயணத்தை தொடர்வோம். மேலும் இத்தகைய தாக்குதலுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சப் போபவர்கள் அல்லர்.

இந்த பேரணியை நடத்துவதற்கு எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை முறியடித்து பொலிகண்டி வரை நிச்சயம் முன்னேறி செல்வோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொத்துவில் முதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தில் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இனவழிப்புப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சி, கந்தசுவாமி கோயில் முற்றத்தில் நடைபெற்றுவரும் பட்டினிப் போராட்டமும், பொத்துவில் தொடங்கியிருக்கும் நடைபயணமும் நம்பிக்கையைத் தருகின்றது.

பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் ஈழச் சொந்தங்களைப் பெரிதும் போற்றுகின்றேன்.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தாயக விடுதலைக்காகவும், தங்களது மண்ணுரிமைக்காகவும் போராடிய தமிழ் மக்கள் மீது, இனவெறியும், இனத்துவேசமும் கொண்டு, பல்வேறு அடக்குமுறைகளை ஏவி, அரசபயங்கரவாதத்தின் மூலமும் உள்நாட்டுப் போர் மூலமும் இரண்டு லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த இனப் படுகொலை நிகழ்ந்து பத்தாண்டுகளாகியும் அது குறித்து எவ்விதப் பன்னாட்டு விசாரணையும் நடத்தப்படாத நிலையில் அதற்கான நீதியைக் கேட்டு நிற்கின்றோம். அனைத்துலக நாடுகளும் கைவிட்ட கையறு நிலையிலும் சர்வதேசச் சமூகத்திடம் மன்றாடி வருகின்றோம்.

தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இலங்கை அரசு இனவழிப்பு நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளதை அண்மைக்காலமாக ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுக்க இராணுவ மயமாக்குவது, தமிழர் காணிகளை ஆக்கிரமிப்பது, புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, பூர்வக்குடிகளான தமிழர்களின் இருப்பைக் குறைப்பது, இருநூறுக்கும் மேற்பட்ட தமிழர் வழிபாட்டுத் தலங்களைச் சிதைத்தழிக்க முயல்வது, புத்த விகாரைகளைப் புதிதாக நிறுவுவது, தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாடு ஆகியவற்றுக்கான வரலாற்று அடையாளங்களை முற்றலுமாக அழிப்பது என மறைமுகமாகவும், நேரடியாகவும் இனவழிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இஸ்லாமிய மக்களின் பாரம்பரிய சமயச் சடங்கான இறந்தவர்களைப் புதைக்கும் செயற்பாடுகளுக்குத் தடைவிதித்து, உடல்களை எரியூட்டிவருவதுடன், அதற்கு எதிராகப் போராடும் இஸ்லாமியர்களை அடக்கி ஒடுக்குவது, விசாரணை ஏதுமின்றி அரசியல் கைதிகளாகச் சிறைகளிலுள்ள தமிழர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க மறுத்து சிங்களக் கைதிகளை மட்டும் விடுவிப்பது, மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தி அவர்களின் பேச்சுரிமை, எழுத்துரிமையைப் பறிப்பதெனப் பல்வேறு தொடர் இனவெறித் தாக்குதல்களை ஒவ்வொரு நாளும் நடத்திக் கொண்டிருக்கின்றது இலங்கை அரசு.

இந்தநிலையில், எத்தகைய அடக்குமுறைகளை ஏவினாலும், இனவழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், தமிழர்களின் உரிமைப்போராட்டம் தமக்கான நீதியைப் பெறும்வரை ஒருநாளும் ஓயப்போவதில்லை என்பதை உணர்த்தும் விதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தற்போதையப் போராட்டங்கள் சிங்கள ஆட்சியாளர்களைக் கலக்கத்திற்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

அந்தவகையில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் சுழற்சி முறையிலான பட்டினிப் போராட்டமும், தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்துப் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை நடைப்பயணமும் தொடங்கப் பெற்றுள்ளதை அறிந்தேன்.

இலங்கையின் சுதந்திர தின நாளை கறுப்பு நாளாகக் கடைப்பிடித்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களைக் கண்டுபிடித்துத் தரக்கோரி அவர்களது உறவுகளால் தொடங்கப்பட்டுள்ள நீதிக்கான இப்போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கிறேன்.

போராட்டம் வெற்றியை நிலைநாட்டவும், கோரிக்கைகள் நிறைவேற்றம் செய்யப்படவும் எமது உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள்ளது.

## போராட்டக்களத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களை நோக்கித் தள்ளிவிட்டுள்ளது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நடப்பு ராஜபக்ஷ அரசின் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற என்ற கூச்சல் நடைமுறையில், 'ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்' என்பதில் வந்து நிற்கின்றது. இதை நாம் இன்று தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்த நாட்டு அரசும், உலகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே, இவர்கள்..! இந்தநிலையில், அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இந்த நாட்டில் எமது இருப்பை உறுதி செய்துகொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயகப் போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

இந்த இலங்கை திருநாடு, 'பன்மொழி, பன்மத, பல்லின' அடிப்படையைக் கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இந்த நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சி உரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதே இலங்கை நாடு என்ற அடிப்படை உண்மையை சிங்கள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டு கண் திறக்கும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இதுவே ராஜபக்ஷ ஆட்சியின் 'ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி' என்ற கொள்கைக்கு உரிய தர்க்கரீதியான அரசியல் பதிலாகும்.

இந்த ஜனநாயகப் போராட்டத்துக்கு எமது ஆதரவை நல்குகின்றோம். ஜனநாயகப் போராட்டக்களத்தில் நிச்சயமாக நாம் கரம் கோர்ப்போம் - என்றுள்ளது.

## நீதிக்கான அஹிம்சைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தத் தடை உத்தரவு கோரி பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பம் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் முன்வைத்த விண்ணப்பங்களும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸ் நிலையங்களினால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்குச் சதி ஏற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முயற்சிக்கின்றனர் எனப் பொலிஸார் நீதிமன்றங்களில் எடுத்துரைத்தனர்.

இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஒன்றுகூடும் உரிமையைப் பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கை மறுக்கின்றது. அத்துடன், ஒரு இனம் நாட்டுக்குச் சதி செய்வதாக பொலிஸார் எண்ணுவது ஏனைய இனங்களுக்கு வெறுப்புணர்வைத் தூண்டும். கொரோனாத் தொற்று நோய் தொடர்பாகப் பேரணி இடம்பெறும் இடங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. இதனால் பொலிஸார் தாக்கல் செய்த அடிப்படையற்ற விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும் என்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த சாவகச்சேரி நீதிவான், பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார்.

இதேபோன்று, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் தாக்கல் செய்த பேரணிக்கான தடை உத்தரவு விண்ணப்பங்கள் இன்று விசாரணைக்கு வந்தன.

மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி ஆட்சேபனை தெரிவித்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பம், சட்டத்தரணிகளின் ஆட்சேபனையை ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா, பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

## தடை உத்தரவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் நீக்கம் செய்தது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையைப் பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நீக்கியது.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப் போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்கு கலங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்திருந்தனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## தடை உத்தரவை .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனடிப்படையில் பிரதிவாதிகள் முன்னிலையாகாத நிலையில் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

இன்று இந்தத் தடை உத்தரவு வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

சட்டத்தரணிகள் வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உள்ளிட்டோர் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர்.

அதனால் ஒருமுக கட்டளையாக வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கிய நீதிமன்றம் கொரோனா நோய்த்தொற்று சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால் அதன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸாரை அறிவுறுத்தியது.

## பருத்தித்துறை நீதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இதையடுத்து இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு வழங்கி கட்டளை வழங்கினார்.

பேரணியில் பங்கேற்போர் பல மாவட்டங்கள் ஊடாக அங்குள்ளவர்களையும் இணைத்து வருவதால் கொரோனாத் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் இந்தத் தடை உத்தரவு வழங்கப்படுகின்றது என்று நீதிவான் கட்டளையில் சுட்டிக்காட்டினார்.

## மாபெரும் எழுச்சிப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொத்துவிலில் தொடங்கிய பேரணி பல்வேறு நெருக்கடிகளைக் கடந்து அம்பாறை, மட்டக்களப்பு ஊடாக நேற்றிரவு திருகோணமலை நகரை வந்தடைந்தது.

இன்று காலை திருகோணமலை நகரில் இருந்து தொடங்கிய பேரணி முல்லைத்தீவு மாவட்டத்தின் சிங்களப் பிரதேசமான வெலிஓய பிரதேசம் ஊடாக நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டது.

குறித்த பேரணி அங்கிருந்து சிறு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து தொடர்ந்து உடுப்புக்குளம் பகுதியில் நின்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கைகோர்த்தது.

இன்று நண்பலுக்குப் பின்னர் நாயாற்றுப் பகுதி ஊடாக முல்லைத்தீவு நகரை நோக்கிப் பேரணி நகர்ந்தது.

நாயாற்றில் பேரணியை வரவேற்பதற்குக் காத்திருந்த பிரமுகர்களை, பொலிஸார் போராட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று தெரிவித்து கட்டளையை வழங்கியிருந்தனர்.

இருந்தபோதிலும் பேரணி நகர்ந்து வந்தது. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட்ட பிரமுகர்கள் பேரணியில் இணைந்துகொண்டனர்.

முல்லைத்தீவுநகரில்பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அங்கு இராயப்பர் தேவாலய முன்றலில் இருந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து வட்டுவாகல் பாலம் ஊடாக முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலுக்குப் பேரணியாகச் சென்ற உணர்வாளர்கள் அங்கு வணக்க நிகழ்வில் பங்கெடுத்தனர். இதன்போது மதத் தலைவர்களால் சிறப்புப் பிரார்த்தனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அதன்பின்னர் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி வவுனியாவை நோக்கிச் செல்கின்றது.

தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கை முழுவதும் திட்டமிட்டு நடத்தப்படும் இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைத்த கோரிக்கைகளை நடைமுறைப் படுத்தக் கோரியும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்தக் கோரியும் முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைகளை மதிக்கக் கோரியும் நீதிக்கான இந்தப் போராட்டப் பேரணி முன்னெடுக்கப்படுகின்றது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொலிகண்டியை இந்தப் பேரணி வந்தடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

கல்யாண மாலையின் இணைந்த சேவை



☛ Full AC பஸ் வாடகைக்கு உண்டு. ஆலய தரிசனங்கள், திருமணங்கள் மற்றும் விசேட சேவைக்கு உடன் அழையுங்கள்.
☛ AC, NON AC கயஸ்வான் வாடகைக்கு உண்டு. நியாயமான கட்டணத்தில் சேவை வழங்கப்படும்.
☛ AC, NON AC கொழும்புக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு -
077 343 4415
077 857 8528

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ரஞ்சன் சார்பாக உத்தரவு

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக சிறைத் தண்டனை அனுபவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்காவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பாக நடவடிக்கை எதையும் எடுப்பதையும் இடைநிறுத்தி வைக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடை உத்தரவு விதித்திருக்கின்றது.

எதிர்வரும் பெப்ரவரி 12 ஆம் திகதி இது தொடர்பான நீதிமன்ற மனு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவிருக்கின்றது. அதுவரைக்குமே தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை ரத்துச் செய்யக் கூடாது என்று உத்தரவிடக் கோரும் இந்த மனு மீதான விசாரணை முடிவுறும் வரை இந்த இடைக் காலத் தடை அவ்வப்போது விடுக்கப்படும்; உத்தரவுகள் மூலம் நீடிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமையால் அவர் தேருநர் தகுதியை இழக்கின்றார் என்றும், அதனால் அவர் எம்.பி. பதவியில் நீடிக்கும் தகுதியையும் இழந்துள்ளார் என்றும் சட்டமா அதிபர் சட்ட வியாக்கியானம் செய்துள்ளார்.

அந்த சட்ட வியாக்கியானத்தின்படி ரஞ்சன் ராமநாயக்கா தமது எம்.பி. பதவியை இழந்து விட்டார் என்று தேர்தல் ஆணையகத்துக்கு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவிக்க வேண்டும் என்றும் –

அதற்கான உத்தரவை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு சபாநாயகர் விடுக்க வேண்டும் என்றும் –

ஆளும் தரப்பினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்தக் கோரிக்கை தொடர்பில் தாம் மூன்று வாரங்களுக்குள் தீர்மானம் எடுத்து அறிவிப்பார் என சபாநாயகர் பிரகடனப்படுத்தியுள்ள நிலையிலேயே, அந்த மூன்றாம் வாரத்தில் இந்த இடைக்காலத் தடை உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து வந்திருக்கின்றது.

இனிமேல், சபாநாயகர் என்ன தீர்மானத்தை எடுத்தாலும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம், நீதிமன்ற உத்தரவைக் கவனத்தில் எடுத்துத்தான் நடந்து கொள்ள முடியும்.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கான சிறைத் தண்டனையைக் காட்டி ஒருவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்க முடியாது என்பதுதான் அவரது சட்டத் தரணிகளின் பிரதான வாதம். அதில் ஆழமான சட்டக் கருத்து இருக்கின்றமையை மறுத்து விட முடியாது.

'இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை விதிக்கக் கூடிய குற்றத்துக்காக, ஆறு மாத காலத்துக்கு மேற்பட்ட சிறைத் தண்டனையை அனுபவித்தவர் நாடாளுமன்ற உறுப்புரிமை பெறும் தகுதியை இழக்கின்றார்' என்பதுதான் சட்ட ஏற்பாடு.

இங்கு, இழைக்கப்படுகின்ற தவறு அல்லது குற்றம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

'இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றம்' என்ற வகைக்குள் அடங்குகின்ற குற்றம் ஒன்றை இழைத்து, அதற்கான தண்டனையில் ஆறு மாத சிறையை அனுபவிக்கும் ஒருவரே எம்.பி. பதவியை இழப்பவராவார்.

ஆனால், நீதிமன்ற அவமதிப்பு என்ற குற்றம் தண்டனைக் காலம் குறிப்பிட்டு தண்டிக்கப்படும் வகையைச் சேர்ந்ததேயல்ல. இலங்கையில், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு சிறைத் தண்டனை என்ற அளவீடு குறிப்பிடப்படவில்லை. நீதிமன்றம் தனக்கு உசிதமானது என கருதும் தண்டனையையோ, அபராதத்தையோ விதிக்க முடியும்.

அதன்படி, அபராதம் ஒரு ரூபாகவோ, பல கோடி ரூபாவாகவோ இருக்கலாம். சிறைத் தண்டனை நீதிமன்றம் கலையும் நேரம் வரையில் என்று ஆரம்பித்து ஆயுள் தண்டனை வரையாகக் கூட இருக்கலாம்.

ஆனாலும், அத்தண்டனை 'இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட தண்டனை விதிக்கப்படும் குற்றத்துக்குரியது' என்பதற்கானதல்ல. அதனால் அத் தண்டனையைக் காட்டி ரஞ்சன் ராமநாயக்காவின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிக்க முடியாது என்ற சட்டவாதத்துக்கு ஆழமான கருத்துப் பரிமாணம் – சட்ட நியாயம் – இருப்பதாகவே தோன்றுகின்றது.

அந்த சட்ட வாதத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமானால், ரஞ்சன் ராமநாயக்கா சிறையில் இருந்தாலும் எம்.பி. பதவியை இழக்க மாட்டார். மாறாக நாடாளுமன்ற அமர்வுக்கு அவரை சிறை அதிகாரிகள் ஒழுங்காகக் கூட்டி வந்து செல்லும் நிலைமை சட்ட ரீதியானதாகும்.

ரஞ்சன் ராமநாயக்காவுக்கு குற்றத் தீர்ப்பை உயர் நீதிமற்றமே வழங்கியது. அதற்கு மேல், மேனிலை நீதிமன்றம் ஒன்று இல்லை என்பதால் அத் தீர்ப்புக் குறித்து மேன்முறையீடு செய்ய முடியாது என்பதுதான் பொதுவான கருத்து.

ஆனால், கிரிமினல் குற்றத் தீர்ப்பு ஒன்று தொடர்பில் குறைந்த பட்சம் ஒரு மேன்முறையீட்டுக்காவது இடமிருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் சர்வதேச சிவில், அரசியல் உரிமைகளுக்கான பட்டயத்தில் இலங்கையும் ஒப்பமிட்டுள்ளது என்பதால் அதனடிப்படையில் மேற்படி தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்திலேயே மீளாய்வு விசாரணை ஒன்றைப் பெறுவதற்கு ரஞ்சன் ராமநாயக்காவுக்கு வாய்ப்பு இருப்பதாகவே கருதப்படுகின்றது.







ஜப்பான் அரசின் நிதியுதவியில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் அமைக்கப்பட்ட ஆராய்ச்சி பயிற்சி நிலையம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

ஜப்பானிய தூதுவர் Akira sugiyama, கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், உட்பட பலர் கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக கட்டத்தைத் திறந்து வைத்தனர்.

# வவுனியாவில் ஊடகவியலாளருக்கு புலனாய்வுத்துறையால் இடையூறு!

வவுனியா, பெப்.05

வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கவனவீர்ப்பு போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு புலனாய்வாளர்களால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 10 மணிக்கு உண்ணாவிரத போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி போராட்டத்தில் செய்தி சேகரிப்பதற்குச் சென்ற வவுனியா பிராந்திய ஊடகவியலாளரான பாலநாதன் சதீசன் என்பவருக்கு அங்கு நின்ற புலனாய்வாளர் ஒருவர் இடையூறை ஏற்படுத்தியதுடன், குறித்த ஊடகவியலாளருடன் முரண்பட்டு அவரது கடமைகளுக்கும் இடையூறை ஏற்படுத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவர் தனது செய்தி சேகரிப்பு பணியை சரியான முறையில் சுதந்திரமாக மேற்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சை பெற்றுவந்த வைத்தியர் நெவில் பெர்னாண்டோ காலமானார்!



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மாலபே நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையின் நிறுவுநர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ காலமாகியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தனது 89 ஆவது வயதில் நேற்று (வியாழக்கிழமை) மாலை அவர் காலமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில், கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் அதிரடிப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை!

பருத்தித்துறையில் கஞ்சா போதைப்பொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வீடொன்றை சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றி வளைத்த நிலையில் ஏற்பட்ட முறுகலில் இரண்டு பொதுமகன்களும் சிறப்பு அதிரடிப் படை உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் ஒருவரும் குடும்பப்பெண் ஒருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேவேளை சிறு காயங்களுக்கு உள்ளான சிறப்பு அதிரடிப்படை உத்தியோகத்தர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை பருத்தித்துறை தும்பளை எல்லை வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டுக்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினர், கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் தேடுதல் நடத்தப் போவதாகவும் கோரினர்.

எனினும் அவ்வாறு கஞ்சா பதுக்கி வைத்திருக்கவில்லை என்று வீட்டின் உரிமையாளர் கூறியுள்ளார்.

அதனையடுத்து சிறப்பு அதிரடிப் படையினருக்கும் அந்தக் குடும்பத்துக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதனை அடுத்து கைக் கலப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் சிறப்பு அதிரடிப் படையினர் வான் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினரின் தாக்குதலில் காயங்களுக்குள்ன குடும்பத்தலை வரும் குடும்பப் பெண் ஒருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதேவேளை சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்தவரும் காயத்துக்கு உள்ளாகினார்.

தமது உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்றும் தமது வாகனத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் சிறப்பு அதிரடிப்படையினர் பருத்தித்துறை பொலிஸில் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை குறித்த வீட்டைச் சேர்ந்த இருவரை அழைத்து வந்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஜோ பைடனுடன் தென்கொரிய அதிபர் பேச்சு தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்த ஒப்புதல்



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடனுடன் தென் கொரிய அதிபர் மூன் ஜே இன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதுகுறித்து மூன் ஜே இன் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார். அதில் அவர், இப்போதுதான் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் ஒரு பெரிய உரையாடலை நடத்தினேன். கொரோனாவின் உலகளாவிய சவால்களுக்கு, பருவநிலை மாற்ற பிரச்சினைகளுக்கு, பொருளாதார பின்னடைவுகளுக்கு மத்தியில் அமெரிக்காவின் புதிய ஆட்சியை வரவேற்றேன் எனக் கூறி உள்ளார். மேலும், தென்கொரியா, அமெரிக்கா கூட்டணியை மேலும் மேம்படுத்தவும் நாங்கள் இருவரும் உறுதி எடுத்துக் கொண்டோம். கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்தவும், உலகளாவிய சவால்களை சமாளிக்கவும் நாங்கள் ஒன்றிணைந்து பாடுபடுவோம் எனவும் கூறி உள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு மூன்ஜே இன் பின்னணியில் இருந்தார். ஆனால் இரண்டாவது சந்திப்புக்கு பின்னர் அந்த பேச்சு தொடரவில்லை. இந்நிலையில் மீண்டும் அமெரிக்காவும், வடகொரியாவும் பேச்சு நடத்தவேண்டும் என்பது மூன் ஜே இன் விரும்புகிறார். எனவே அவர் ஜோ பைடனுடன் நடத்திய பேச்சு முக்கியத்துவம் பெறுகிறது.

# குழந்தை பிறந்து 3 மாதங்களுக்குப் பின் குழந்தையை சந்தித்த தாய்

## அமெ.யில் உருக்கமான சம்பவம்



அமெரிக்காவில் விஸ்கான்சின் மாகாணத்தில், மேடிசன் நகரில் கெல்சி என்ற பெண் நான்காவது முறையாக கர்ப்பம் தரித்து குழந்தையை பெற்றெடுக்க இருந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம், கொரோனா தாக்கியது. அவர் அங்குள்ள செயின்ட் மேரி வைத்தியசாலையில் நவம்பர் 4 ஆம் திகதி சேர்க்கப்பட்டார். கெல்சியின் ஒக்சிஜன் அளவு மிக குறைவாக இருந்தமையால் அவரை மருத்துவ ரீதியில் கோமாவில் ஆழ்த்திய வைத்தியர்கள், சிசேரியன் அறுவை சிகிச்சை செய்து, பெண் குழந்தையை பிரசவிக்க செய்தனர். டிசெம்பர் மாத இறுதியில் கெல்சிக்கு நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும் என வைத்தியர்கள் கருதினர்.

ஆனால் அவரது உடல்நிலை திடீரென நன்றாக தேறத்தொடங்கியது. ஜனவரி மாதம் மத்தியில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து அவர் சாதாரண சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். இதற்கிடையே அவரது குழந்தை லூசி என பெயரிடப்பட்டு தந்தை டெரக் டவுன்சென்ட் பராமரிப்பில் வளரத்தொடங்கினாள். ஏற்கனவே 3 குழந்தைகள் இருந்த நிலையில் இந்த நான்காவது குழந்தையையும் இக்கட்டான தருணத்தில் அவர் கவனமாக வளர்த்து வந்தார்.

இதில் என்ன ஆச்சரியம் என்றால் கணவன், மனைவி இருவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு, கணவர் டெரக் டவுன்சென்ட் சீக்கிரமாக குணமடைந்து, மனைவி கெல்சியின் நிலைதான் மோசமானது தான்.

கொரோனாவில் இருந்து மீண்டு வந்த நிலையில் தான் குடும்ப பொறுப்பை டெரக் டவுன்சென்ட் ஏற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

ஏறத்தாழ 3 மாதங்களுக்கு பின்னர் இப்போது குணமடைந்து, கெல்சி வீடு திரும்பியுள்ளார். நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். நான் உன்னை வெகுவாக தவறவிட்டுவிட்டேன் என்று கூறிக்கொண்டே 3 மாதங்களுக்கு முன்னர் பிறந்த தனது செல்லம் கள் லூசியை கொஞ்சி மகிழ்கிறார்.

# உலகிலேயே மிகவும் சிறிய ஊர்வன உயிரினம் கண்டுபிடிப்பு



ஊர்வன வகை உயிரினங்களிலேயே மிகவும் சிறிய உயிரினத்தை ஜேர்மன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

ஆபிரிக்காவின் மடகாஸ்கர் தீவில் ஆய்வு மேற்கொண்ட அவர்கள், பதிமூன்றரை மில்லிமீற்றர் நீளமான ஆண் பச்சோந்தியையும், 22 மில்லிமீற்றர் நீள பெண் பச்சோந்தியையும் கண்டுபிடித்தனர்.

அரை இன்சிக்கும் குறைவாக, சூரியகாந்தி மலரின் விதை அளவே உள்ள இந்த ஆண் பச்சோந்தி தான் இது வரை கண்டறியப்பட்டுள்ள ஊர்வன வகை உயிரினங்களில் மிகவும் சிறியது என அவர்கள் தெரிவித்தனர்.

# 18 - 60 வயதிற்கு உட்பட்டோருக்கு மட்டுமே சீனாவின் சீனோபார்ம் தடுப்பூசி போடவும்

## பாகிஸ்தான் பிரமருக்கு ஆய்வின் பின் பரிந்துரை

கொரோனாத்தடுப்பூசிசெலுத்தும் பணிகளை பெரும் பாலான நாடுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்தியாவில் கடந்த மாதம் 16 ஆம் திகதியில் இருந்து சுகாதாரப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானுக்கு சீனா சினோபார்ம் என்ற தடுப்பூசியை கடந்த திங்கட்கிழமை வழங்கியது. சீனா வழங்கிய ஐந்து லட்சம் தடுப்பூசிகளை கொண்ட பாகிஸ்தான் நேற்று கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடைமுறையை தொடங்கியது.

முதற்கட்டமாக சுகாதாரப்பணியாளர்களுக்கும், அதன்பின் வயதுடையவர்களுக்கும், பின்னர் அனைத்து நபர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் வல்லுநர் குழுவின் முதற்கட்ட ஆய்வில் சீனாவின் சீனோபார்ம் தடுப்பூசி 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு பயனளிக்கவில்லை என பரிந்துரை செய்துள்ளதாக, பிரமருக்கான சுகாதார சிறப்பு உதவியாளர் டாக்டர் பைசல் சுல்தான் தெரிவித்துள்ளார். அந்த குழு 18 வயதில் இருந்து 60 வயதிற்கு உட்பட்டோருக்கு மட்டுமே செலுத்த பரிந்துரை செய்துள்ளது.

மேற்கொண்டு ஆய்வுகளை செய்து அதன்பின் பயன்படுத்துவது குறித்து முடிவு செய்யப்படும் என்றார். பாகிஸ்தான் அரசு சீனோபார்ம் உடன் ரஷ்யாவின் ஸ்புட் னிக் வி, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் - ஒஸ்ட்ராஜெனேகா இணைந்து தயாரித்துள்ள கோவாக், ஆகிய தடுப்பூசிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கோவாக்ஸ் முதற்கட்டமாக 17 மில்லியன் டோஸ் தடுப்பு மருந்து பாகிஸ்தானுக்கு இந்த வருடத்தின் பாதிக்குள் வழங்கப்படவுள்ளது. இந்தத் தடுப்பூசி முதியோர்களுக்கு வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ரூபா 800 கோடி பண பரிமாற்ற வழக்கில் பாக். முன்னாள் அதிபர் சர்தாரிக்கு பிணை



பாகிஸ்தான் முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரி (வயது 65). இவர் போலி வங்கிக்கணக்கு மூலமாக ரூ.800 கோடியை சந்தேகத்துக்கு இடமான வகையில் போலிவங்கிக் கணக்குகளுக்கு பரிமாற்றம் செய்திருப்பதாக அந்த நாட்டின் ஊழல் தடுப்பு அமைப்பு வழக்கு தொடுத்துள்ளது. இதில் அவர் கைது செய்யப்பட்டு காவலில் உள்ளார். அவருக்கு பிணை வழங்கக்கோரி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனுவை நீதிபதிகள் அமீர் பாரூக், மோசின் அக்தர் கயானி ஆகியோர் தலைமையிலான அமர்வு நேற்று முன்தினம் விசாரித்தது. அப்போது ஊழல் தடுப்பு அமைப்பின் சட்டத்தரணி சர்தார் முசாப்பர் அப்பாசி வாதிடுகையில், இந்த வழக்கில் குறிப்பு கோப்பு இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை, வழக்கு விசாரணையில் உள்ளது என குறிப்பிட்டார். சர்தாரியின் சட்டத்தரணி பாரூக் நாயக் வாதிடும்போது, இந்த வழக்கில் சர்தாரிகைதுசெய்யப்பட்டு 2 மாதங்களுக்கு மேலாக காவலில் உள்ளார். அவரிடம் ஊழல் தடுப்பு அமைப்பு இந்த காலகட்டத்தில் விசாரணை நடத்தி இருக்க முடியும். சர்தாரி எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க தயார் என்று கூறினார்.

இதற்கிடையே சர்தாரியின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்திய கமினின் அறிக்கை, நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கைக்கு ஊழல் தடுப்பு அமைப்பு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இதையடுத்து உடல்நலத்தை காரணம் காட்டி சர்தாரிக்கு நீதிபதிகள் பிணை வழங்கி உத்தரவிட்டனர்.

# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நெஞ்சு வலியால் திடீர் உயிரிழப்பு



ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸ் நவால்னிக்கு சிகிச்சை அளித்த ரஷ்ய மருத்துவர் திடீரென உயிரிழந்து உள்ளார்.

கடந்த ஆண்டு ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸ் நவால்னி சைபீரியாவில் உள்ள ஒம்ஸ்க் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு சொர்ஜி மக்ஸிமிஷின் என்ற மருத்துவர் சிகிச்சை அளித்திருந்தார்.

இந்த நிலையில் சொர்ஜி மக்ஸிமிஷின் பணியின் போதே திடீரென உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் நெஞ்சு வலி காரணமாக சொர்ஜி மக்ஸிமிஷின் இறந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆங் சான் சூகியை விடுதலை செய்ய வேண்டும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் வலியுறுத்துகின்றது



தென்கிழக்கு ஆசிய நாடான மியன்மார் நாட்டு இராணுவம் தேர்தலில் பெரிய அளவில் முறைகேடுகள் நடந்ததாக குற்றம் சாட்டிய மையோடு, தேர்தல் முடிவுகளை ஏற்கவும் மறுத்தது. ஆனால் இராணுவத்தின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதார மற்றவை என கூறி தேர்தல் ஆணையம் அதை நிராகரித்தது.

இந்த விவகாரத்தில் மியன்மார் அரசுக்கும் அந்த நாட்டு இராணுவத்துக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வந்த நிலையில், சமீபத்தில் இராணுவம் அதிரடியாக ஆட்சியை கைப்பற்றியது. நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்பட முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளை இராணுவம் கைது செய்து சிறை வைத்துள்ளது.

அடுத்த ஒரு வருடத்துக்கு நாட்டில் இராணுவ ஆட்சி நடைபெறும் என்றும் அதன் பிறகு தேர்தல் நடத்தப்பட்டு வெற்றியாளரிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளது.

மியன்மார் இராணுவத்தின் நடவடிக்கைக்கு இந்தியா உள்பட அனைத்து நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், மியன்மாரில் கைது செய்து சிறை வைக்கப்பட்டுள்ள ஆங்சான் சூகியை உடனே விடுதலை செய்ய வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் வலியுறுத்தியுள்ளது. மேலும், மியன்மாரில் நிலவும் சூழ்நிலை கவலை அளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் எல்லையில்கூட இப்படி செய்திருக்க மாட்டீர்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக சபையில் கொந்தளித்த எம்.பி.

இந்தியாவில் விவசாய சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் டெல்லி எல்லைகளில் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். குடியரசு தினத்தன்று நடந்த டிராக்டர் பேரணியின்போது வன்முறை ஏற்பட்டதையடுத்து, போராட்டம் நடைபெறும் எல்லைகளில் பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளனர். பேரிகார்டுகளை கொண்டு மிகப்பெரிய அரண்களை ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன், இணையச் சேவை, மின்சாரம், கழிப்பிட வசதிகளையும் தடை செய்துள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளின் போராட்டம் தொடர்பாக மாநிலங்களவையில் இன்றும் விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. சதீஷ் மிஷ்ரா பேசியதாவது:-

விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக நீங்கள் (அரசு) அகழிகளை தோண்டி வைத்திருக்கிறீர்கள். இதை நீங்கள் அவர்களுக்காக தோண்டவில்லை, உங்களுக்காக தோண்டியிருக்கிறீர்கள். அங்கே பெண்களும் இருக்கிறார்கள் என்று நினைக்காமல், தண்ணீர், மின்சாரம் மற்றும் கழிப்பிட வசதிகளை அகற்றியிருக்கிறீர்கள். இது மனித உரிமை மீறல் ஆகும்.

போராட்டக் களங்களின் அருகே சாலையில் ஆணிகள் பதிக்கப்பட்டுள்ளன. டெல்லி எல்லையில் செய்வது போல பாகிஸ்தான் எல்லையில் கூட அரசு இந்த வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்காது என்று நினைக்கிறேன். நமக்கு உணவு வழங்குபவர்கள் தேசத்தின் எதிரி என்று அழைக்கப்படுகிறார்கள். எனவே, சுயமரியாதையைத் தவிர்த்து, மூன்று சட்டங்களையும் இரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு அவர் பேசினார்.



## விவசாயிகள் போராட்டத்திற்கு கிரேட்டா தன்பெர்க் ஆதரவு!



அமைதியான முறையில் போராடி வரும் விவசாயிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக பிரபலங்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் குரல் கொடுத்து வருகின்றனர்.

பருவநிலை மாற்றம் தொடர்பாக ட்ரம்ப் உள்ளிட்ட உலகத் தலைவர்களை கேள்விகளால் துளைத்த சுவீடனின் சுற்றுக் சூழல் செயற்பாட்டாளர் கிரேட்டா தன்பெர்க் விவசாயிகளுக்கு ஆதரவான டுவீட்களை தொடர்ந்து பதிவிட்டு வருகிறார்.

அவர் மீது டெல்லி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சதி மற்றும் குழுவினருக்கு இடையே பகைமையை வளர்ப்பதற்கான முயற்சி ஆகிய பிரிவுகளில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த நிலையில் வழக்கு தொடர்ந்தாலும் அமைதியான முறையில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவு தொடரும் என கிரேட்டா தன்பெர்க் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.


## நாளை விவசாயிகள் நாடு தழுவிய போராட்டம் அதிகாரிகளுடன் அமித் ஷா அவசர ஆலோசனை

விவசாயிகள் நாளை தேசிய நெடுஞ்சாலைகளை முற்றுகையிட்டு மூன்று மணி நேரப் போராட்டம் நடத்த உள்ள சூழ்நிலையில் இந்திய உள்துறை அமைச்சர் உயர் மட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உளவுத்துறை இயக்குனர் அரவிந் குமார் , டெல்லி காவல்துறை ஆணையர் ஸ்ரீவாத்சவா உள்பட பல அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

குடியரசு தினத்தன்று டெல்லியில் நடந்த வன்முறைகளைப் போல் இந்த போராட்டத்திலும் வன்முறைகள் நிகழாதவாறு தடுப்பதற்கு ஆலோசனை நடத்தப்பட்டது.

நாடு தழுவிய அளவில் நாளை 6 ஆம் திகதி விவசாய சங் கங்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தவுள்ள நிலையில் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.



நாளை நண்பகல் 12 மணி முதல் 3 மணி வரை அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் போக்குவரத்தை முடக்கப் போவதாக விவசாய சங்கங்கள் அறிவித்துள்ளன.

## விவசாயிகளின் போராட்டத்தை தொடர்பான அமெரிக்காவின் கருத்துக்கு இந்தியா பதில்

விவசாயிகள் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட கருத்துக்களை அடுத்து கடந்த குடியரசு தினத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவத்தை அமெரிக்காவின் நாடாளுமன்ற முற்றுகைச் சம்பவத்துடன் ஒப்பிட்டு மத்திய வெளியுறவு அமைச்சகம் பதில் அனுப்பியுள்ளது.

விவசாயிகளுடனான பிரச்சினையை பேச்சு நடத்தி தீர்க்க இந்திய அரசு முயற்சிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருந்தது. அமைதியான போராட்டங்களை அனுமதிக்க வேண்டும், இணைய சேவைகளை முடக்கக் கூடாது என்றும் அமெரிக்கா கோரியுள்ளது.

இதற்கு பதிலளித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், விவசாயிகளுடனான முரண்பாட்டை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு மத்திய அரசு திறந்த மனத்துடன் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இந்தியாவும் அமெரிக்காவும் ஒரே மாதிரியான ஜனநாயக வேறுபாடுகளை கொண்டிருக்கும் நாடுகள் என்று சுட்டிக் காட்டியுள்ள இந்திய வெளியுறவுத் துறை ஜனவரி 6 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்றத்தை முற்றுகைப் போராட்டத்தில் நிகழ்ந்த வன்முறையை குடியரசு தினத்தில் டெல்லியில் நிகழ்ந்த வன்முறையுடன் ஒப்பிட்டு பதில் அளித்துள்ளது.

## எழுத்தாளர் கே.எஸ்.பகவான் முகத்தில் கறுப்பு மை பூசிய பெண் சட்டத்தரணி

கன்னடத்தில் பிரபல எழுத்தாளராக இருந்து வருபவர் கே.எஸ்.பகவான் (வயது 75). இவர் சமீபகாலமாக இந்து கடவுள்களை அவமதிக்கும் வகையில் பேசி வருவதாக கூறப்படுகிறது. ராமர் ஒரு குடிகாரர் என்று கூறி கே.எஸ்.பகவான் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தார். மேலும் அவர் தொடர்ந்து இந்து கடவுள்களை அவமதித்து வந்ததாக சொல்லப்படுகிறது. இதுதொடர்பாக கே.எஸ்.பகவான் மீது பொலிஸ் நிலையங்களில் ஏராளமான வழக்குகள் பதிவாகி உள்ளன.

இந்த நிலையில் சமீபத்தில் இந்து மதம் என்று எதுவும் இல்லை. இந்து மதம் அவமானகரமானது. கண்ணியம் உள்ளவர்கள் இந்து மதத்தில் இருக்க கூடாது என்று கே.எஸ்.பகவான் கூறி இருந்தார். இதையடுத்து இந்துக்களை அவமதித்ததாக கே.எஸ்.பகவான் மீது, சட்டத்தரணி மீரா ராகவேந்திரா என்பவர் வழக்கு தொடர்ந் தார். இந்த வழக்கு பெங்களூரு சிட்டி சிவில் நீதிமன்றில் நடந்து வருகிறது. அந்த வழக்கின் மீதான விசாரணை நேற்று நடந்தது.

இந்த வழக்கில் ஆஜராக நேற்று கே.எஸ்.பகவான், பெங்களூரு சிட்டி சிவில் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார். அப்போது அங்கு வந்த பெண் சட்டத்தரணியான மீரா ராகவேந்திரா, இந்து மதத்தை அவமதிப்பது குறித்தும், இந்து கடவுள்களை தொடர்ந்து இழிவாக பேசி வருவது குறித்தும் கே.எஸ்.பகவானிடம் கேட்டு தகராறு செய்து உள்ளார். மேலும் தான் மறைத்து வைத்திருந்த கறுப்பு மையை எடுத்து கே.எஸ்.பகவான் முகத்தில் சட்டத்தரணி மீரா ராகவேந்திரா பூசினார்.

இதனை சற்றும் எதிர்பாராத கே.எஸ்.



பகவான் அதிர்ச்சி அடைந்தார். மேலும் நீதிமன்றில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த பொலிஸார் சட்டத்தரணி மீரா ராகவேந்திராவை சமாதானப்படுத்தி அங்கிருந்து அழைத்து சென்றனர். இதனால் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு உண்டானது.

இந்த சம்பவம் குறித்து சட்டத்தரணி மீரா ராகவேந்திரா மீது அல்சூர்கேட் பொலிஸில் கே.எஸ்.பகவான் புகார் அளித்தார். அந்த புகாரின்பேரில் மீரா ராகவேந்திரா மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 341 (தவறான நோக்கத்திற்காக தடுப்பது) மற்றும் 504 (வேண்டுமென்றே அவமதிப்பது, பொது அமைதியை சீர்குலைக்க முயற்சிப்பது) ஆகிய 2 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதுதொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் இந்து கடவுள்களை தொடர்ந்து அவமதித்து வந்ததால் எழுத்தாளர் கே.எஸ்.பகவான் முகத்தில் கறுப்பு மையை பூசினேன் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ள சட்டத்தரணி மீரா ராகவேந்திரா, கே.எஸ்.பகவான் முகத்தில் கறுப்பு மை பூசிய வீடியோவையும் வெளியிட்டார். அந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

## விவசாயிகளின் கடன் தள்ளுபடி முதலமைச்சர் எடப்பாடி அறிவிப்பு

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சட்டசபையில் இன்று 110 ஆவது விதியின் கீழ் ஒரு அறிக்கை வாசித்தார். அதில் கூறியிருப்பதாவது:-

விவசாயிகளுக்கு துயர் ஏற்படும் போதெல்லாம், அம்மா அரசு உதவிக் கரம் நீட்டி, அவர்களைக் காப்பதில் முன்னிலையில் இருந்து வருகின்றது. அதனால்தான், 2016 ஆம் ஆண்டு அம்மா மீண்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற உடன், 31.3.2016 வரை நிலுவையில் இருந்த 5,318.73 கோடி ரூபா விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார். இதனால் 12.02 லட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.

2017ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக இழப்பைச் சந்தித்த விவசாயப் பெருமக்களுக்கு 2,247 கோடி ரூபா வறட்சி நிவாரணத் தொகையாக அம்மாவின் அரசு வழங்கியது. இதைத் தொடர்ந்து, விவசாயிகளின் வாழ்வு செழிக்க, பல்வேறு நலத்திட்டங்களும், விவசாயக் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களும் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், 2019 - 20 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றின் காரணமாக உலக நாடுகள் பலவும்



பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. தமிழ் நாட்டிலும் இதன் தாக்கம் இருந்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியது.

இந்தப் பேரிடர், அறுவடைகளுக்குத் தயாராக இருந்த நெல், கரும்பு, வாழை, தோட்டப் பயிர்களை மட்டு மல்லாது, மானாவாரி பயிர்களையும் பெருமளவில் சேதப்படுத்தியது.

விவசாயப் பெருமக்களின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள எனது தலைமையிலான அம்மாவின் அரசு, மத்திய அரசின் நிதி விடுவிப்பையும் எதிர்பாராமல், இறக்கும்படி செய்த பயிர்களுக்கான இடுபொருள் உதவித் தொகை 1,717 கோடி ரூபாயை 16.43 லட்சம் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க உத்தரவிட்டு, அந்தத் தொகையையும் நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# உரிமைப்போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவில் போராட்டம்!








முல்லைத்தீவு, 05

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த உறவினர்களால் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுதந்திர தினத்துக்கு எதிராகக் கறுப்புக் கொடிகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் பதாகைகளைத் தாங்கியும் தமது எதிர்ப்பை இவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக முல்லைத்தீவு எல்லையான கொக்குளாய் பகுதியிலும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களை வவுனியாவில் அணிதிரளுமாறு அழைப்பு!

## விடுத்தது மக்கள் காங்கிரஸ்

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி இன்று வவுனியாவை வந்தடையவுள்ள நிலையில், இதற்கு வவுனியா முஸ்லிம்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்தக்கட்சி அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில், 'சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான அடக்கு முறைகளை எதிர்த்துத் தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கட்சிகளால் பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேரணிக்கு, தமது பூரண ஒத்துழைப்புகளை வழங்குமாறு வவுனியா மாவட்டத்தில் வசித்துவரும் அனைத்து முஸ்லிம்மக்களிடமும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

சிறுபான்மையினர் என்ற வகையிலும் முஸ்லிம் சமூகமும் இந்த அரசாங்கத்தின் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இனம் என்றவகையிலும் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் போராடத்தில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டிருந்தனர்.

இதேவேளை, குறித்த போராட்டம், இன்று மதியம் வவுனியாவை வந்தடைந்தது. அந்த நேரத்தில் வவுனியா கொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தினச் சந்தைக்கு முன்பாக அனைத்து முஸ்லிம் உறவுகளும் ஒன்று கூடி இணைந்தனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் முகமதுலரீப் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

# உரிமைப் போர் நசுக்கப்படுவதால் ஓய்ந்துவிடப் போபவர்கள் அல்லர்!

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் காட்டம்




தமிழ் மக்கள் உலகமெங்கும் போராடிக் கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கையில் தமிழர் போராட்டம் நசுக்கப்படுகின்ற காரணத்தால் ஓய்ந்துவிடப் போபவர்கள் அல்லர் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த செய்தியை இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை தமிழர் போராட்டம் எங்கும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புலம்பெயர் தேசங்களில் எமது தமிழ் மக்கள் தாயகத்தில் உரிமைகளை வென்றெடுக்கப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், தமிழகத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் இதனை வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆறாம் திகதி ஓரணியாக பேரணியாகத் திரளுங்கள்!

## யாழில் அணிவகுக்க விந்தன் அழைப்பு

சமய, காலாசார மொழி அடையாளங்களை அழிக்கும் நோக்கில் அரசதிணைக்களங்கள் வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளில் அத்துமீறிச் செயற்படுகின்றன என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி வடக்கு நோக்கி வருந்து கொண்டிருக்கின்ற நிலையில், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்த பேரணி, யாழ்ப்பாணத்துக்கு வரும்போது, பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அனைத்து சமயம் சார்ந்தவர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஓரணி யாக, பேரணியாகத் திரள வேண்டும்என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையில் இருந்து தமிழ் மக்கள் மொத்தமாக விரட்டப்படும் அபாயம்!

## எழுச்சி கொள்ளுமாறு சுரேஷ் அழைப்பு



நாட்டில் தமிழர்களின் இருப்பு இன்று கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளில் தமிழரின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், நாட்டிலிருந்து தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக விரட்டப்படக் கூடிய ஒரு சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது என அவர் கூறியுள்ளார். எனவே, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சிப் பேரணியில் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டுமென அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணையவும்!

## சசிகலாவும் கோரிக்கை



நாட்டில் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் போராட்டமாகவே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம் இடம்பெற்று வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் துணைவியார் சசிகலா ரவிராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இந்தப் பேரணி வடக்கில் நிறைவடையும் வரை அனைத்துத் தரப்பினரும் பூரண ஆதரவை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், தமிழர் மீதான அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டமே இடம்பெறுவதாகவும், இது சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1980.04.19 | பிறந்த திகதி - 1986.08.16 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - மிருகசீரிடம் 4 | நட்சத்திரம் - பூராடம் |
| சூ/செவ் - ----- | செவ் - ------ |
| பாவம் - 4 3/4 | பாவம் - 38 1/2 |
| கல்வி - CIMA 1,2, 3 | கல்வி - MBBS |
| தொழில் - கணக்காளர் | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - படித்த பட்டதாரி அழகான பெண் | எதிர்பார்ப்பு - Doctor or Engineer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.02.2021இல் வெளியிடப்பெற்றது.